curious hats
curioushats.com

# திருக்குறளும் திருக்குர்ஆனும்



# திருக்குறளும் திருக்குர்ஆனும்

தொகுப்பு

curious hats
curioushats.com

# பொருளடக்கம்


பக்கம்

1. நம்மை படைத்த இறைவன் ஒருவனே! ............ 3
2. இறைவன் தேவையற்றவன் ............................ 4
3. இறைவனுக்கு நிகராக யாரும் கிடையாது ........ 5
4. இறைவனை மட்டும் தான் வணங்க வேண்டும்.. 5
5. கண், காது இருந்தும் பயனில்லை... ................ 7
6. எங்கே நிம்மதி? ............................................... 8
7. இறைத்தூதர்கள் ............................................ 9
8. இறைத்தூதர்கள் பற்றி திருக்குறள் பேசி இருக்கிறதா? ................................................ 11
9. முடிவில்லாத வாழ்க்கை வாழ... .................... 15
10. மரணத்திற்கு பின் வாழ்க்கை உண்டு ............. 15
11. இந்த உலகம் தற்காலிகமே... ........................ 18
12. சமத்துவம் ..................................................... 19
13. ஒருவர் நமக்கு தீமை செய்தால்.. .................. 20
14. நீதமாக நடந்து கொள்! ................................... 20
15. தூய உள்ளம் ................................................. 21

16. உன் செயல்களை வைத்து தான்... ................ 22

17. நல்ல சொற்கள் தர்மத்தை விட பெரிது ........ 22

18. கஞ்சத்தனம் ........................................ 23

19. தர்மத்திலும் நிதானம் ................................ 24

20. புறம்பேசுதல் ........................................ 25

21. மது அருந்தாதே! ..................................... 26

22. மரண வேதனை ....................................... 27

23. ஏழைக்கு உணவு கொடு! ............................ 28

24. சொல்வதை செய் ................................... 29

25. சிந்தித்து செயல்படு ................................ 30

26. ஒரு வேண்டுகோள் .................................. 31

27. முடிவுரை ........................................... 32

# முன்னுரை

திருக்குறளும் திருக்குர்ஆனும் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களால் போற்றப்படும் உயரிய நூல்களாக விளங்குகின்றன. தமிழ் மொழியின் பெருமையையும், அதன் அறிவு ஆழத்தையும் உலகிற்கு எடுத்துச் சொன்ன மாபெரும் இலக்கியமாக திருக்குறள் திகழ்கிறது. அதேவேளை, மனிதனின் முழுமையான வாழ்வின் வழிகாட்டியாக, இறைவேதமாக திருக்குர்ஆன் விளங்குகிறது.

இரு நூல்களும் வெவ்வேறு கால கட்டங்களிலும், வெவ்வேறு பண்பாட்டு சூழல்களிலும் தோன்றியவை என்றாலும், பல ஒற்றுமைகள் இந்நூல்களில் காணப்படுவது நம்மை ஆச்சர்யப்படுத்துகிறது. இவ்விரு நூல்களையும் ஒப்பிட்டு ஆராயும் போது, அது இரு சமூகங்களுக்கிடையே உள்ள ஒற்றுமையை பலப்படுத்துவது மட்டுமல்ல, இவ்விரு நூல்களும் மனிதனை நற்பண்புகளின் அடிப்படையிலேயே வழிநடத்துகின்றன என்பதையும் உணர்த்தும்.

இறைநம்பிக்கை, மறுமை வாழ்வு, தனிமனித ஒழுக்கம், அறம், நீதி போன்ற பல விஷயங்களில் ஒத்த கருத்துக்களையே இந்நூல்கள் சொல்கின்றன. வியப்பூட்டும் பல ஒற்றுமைகள் இருந்தாலும், சிலவற்றை மட்டும் இச்சிறு நூலில் காண்போம்.

**குறிப்பு:** திருக்குறளின் விளக்கத்திற்கு சாலமன் பாப்பையா, மு. வரதராசன், புலியூர்க் கேசிகன், கலைஞர் கருணாநிதி ஆகியோர் எழுதிய உரைகளை பயன்படுத்தியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நம்மை படைத்த இறைவன் ஒருவனே!

**குறள் #1**

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

இந்த குறளில், உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது என்று வள்ளுவர் சொல்கிறார்.

குர்ஆன் என்ன சொல்கிறது?

**குர்ஆன் அத்தியாயம் 1 வசனம் 1**

**அகிலத்தைப் படைத்து பராமரிக்கும் இறைவனுக்கே எல்லா புகழும்!**

அகிலத்தைப் படைத்து பராமரிப்பவன் இறைவன் தான். அகிலமே இறைவனை அடிப்படையாக கொண்டது என்று குர்ஆனும் சொல்கிறது.

***நீங்கள் திருக்குறளை முழுமையாக கவனமாக படித்துப் பார்த்தால், "பல கடவுள்கள்" என்று சொல்லும் ஒரு குறள் கூட இல்லை. ஒரே இறைவன் பற்றியே வள்ளுவர் பேசுகிறார்.***

**குர்ஆன் அத்தியாயம் 37 வசனம் 4**

**நிச்சயமாக உங்கள் கடவுள் ஒருவன்தான்.**

குர்ஆனும் கடவுள் ஒருவன்தான் என்று மிக தெளிவாகவும், அழுத்தமாகவும் சொல்கிறது.

***பல கடவுள்கள் இருப்பது சாத்தியமா? அப்படி நம்புவது அறிவுக்கு பொருந்துமா? இந்த QR code ஐ ஸ்கேன் செய்து பதிலை தெரிந்துக் கொள்ளுங்கள்.***

திருக்குறளை மதிக்கும் பலர், கடவுளை மறுக்கும் நாத்திகர்களாக இருக்கிறார்கள். ***கடவுள் என்பவன் இருக்கிறானா? கடவுளை படைத்தது யார்? இந்த கேள்விகளுக்கான அறிவுப்பூர்வமான பதில்களை ஆதாரங்களோடு அறிந்துக் கொள்ள, இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

◇◇◇◇◇◇◇◇◇

# இறைவன் தேவையற்றவன்

குறள் #4

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

இந்த குறளில், இறைவனுக்கு விருப்பு, வெறுப்பு, தேவைகள் இல்லை என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

குர்ஆன் இதையே இப்படி சொல்கிறது:

**குர்ஆன் அத்தியாயம் 112 வசனம் 2**

**இறைவன் (எவருடைய) தேவையுமற்றவன்.**

# இறைவனுக்கு நிகராக யாரும் கிடையாது

குறள் #7

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.**

தனக்கு இணையேயில்லாதவன் தான் கடவுள் என்று வள்ளுவர் சொல்கிறார்.

குர்ஆனும் இதே கருத்தை அழுத்தமாகச் சொல்கிறது:

குர்ஆன் அத்தியாயம் 112 வசனம் 4

**இறைவனுக்கு நிகராக எவரும் இல்லை.**

◇◇◇◇◇◇◇◇◇◇

# இறைவனை மட்டும் தான் வணங்க வேண்டும்

குறள் #2

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.**

இந்த குறளில், எல்லாம் அறிந்த இறைவனை வணங்காதவருக்கு அறிவு இருந்தும் என்ன பயன் என்று வள்ளுவர் கேட்கிறார்.

இதே கருத்தை குர்ஆன் எப்படி சொல்கிறது என்று பாருங்கள்!

**குர்ஆன் அத்தியாயம் 2 வசனங்கள் 163,164**

**(மனிதர்களே!) உங்கள் வணக்கத்திற்குத் தகுதியானவன் ஒரே ஓர் இறைவன் தான். அளவில்லாமல் அருள் புரியும், இணை-யில்லாமல் இரக்கம் காட்டும் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை.**

**பிரபஞ்சத்தை படைத்திருப்பதிலும், இரவு பகல் மாறிமாறி வருவதிலும், மக்களுக்குப் பயனளிப்பவற்றுடன் கடலில் செல்லும் கப்பலிலும், இறைவன் வானத்திலிருந்து இறக்கி வைக்கும் மழையிலும், பூமி வறண்ட பின் அதன் மூலம் அதைச் செழிக்கச் செய்வதிலும், ஒவ்வொரு உயிரினத்தையும் அதில் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறிமாறி வீசச் செய்திருப்பதிலும், வானத்திற்கும் பூமிக்கும் இடையில் கட்டுப்படுத்தப்பட்ட மேகத்திலும், சிந்தித்துப் புரிகிற மக்களுக்கு பல அத்தாட்சிகள் உள்ளன.**

நம்மை படைத்த இறைவனைத் தவிர யாரையும் வணங்க கூடாது என்று குர்ஆன் சொல்லிவிட்டு, இந்த பிரபஞ்சத்தில் உள்ள இறைவனின் அத்தாட்சிகளை பற்றியும், பிரபஞ்சம், மழை, இரவு–பகல், காற்று, உயிரினங்கள் பற்றியும் சிந்தித்து பார்த்தால், அறிவுள்ள யாரும், இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்க மாட்டார்கள் என்று குர்ஆன் சொல்கிறது.

# கண், காது இருந்தும் பயனில்லை...

குறள் #9

**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

கண், காது இருந்தும் பயன் பெறாதவர்களை போன்றவர்கள் தான் கடவுளை வணங்காதவர்கள் என்று வள்ளுவர் மிக கடுமையாகச் சொல்கிறார்.

*இறைவனை மட்டும் வணங்காமல் நிராகரிப்பவர்கள் பற்றி கண்கள் இருந்தும் பார்க்க மாட்டார்கள், காது இருந்தும் கேட்க மாட்டார்கள், கால்நடைகள் போல் சிந்திக்க மறுப்பவர்கள் என்று குர்ஆன் விவரிக்கிறது.*

குர்ஆன் அத்தியாயம் 7 வசனம் 179

**அவர்களுக்கு கண்கள் உண்டு, அவற்றின் மூலம் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு செவிகள் உண்டு, அவற்றின் மூலம் செவிகொடுத்து கேட்க மாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். அதை விட வழிகெட்டவர்கள்.**

◇◇◇◇◇◇◇◇◇◇

# எங்கே நிம்மதி?

குறள் #7

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.**

தனக்கு இணையேயில்லாத கடவுளை நினைத்து சிந்திப்பவர்களுக்கு மட்டுமே, தங்களுடைய மனக்கவலையை மாற்ற முடியும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இதே கருத்தை குர்ஆனும் மிக அழகாக வலியுறுத்துகிறது.

**குர்ஆன் அத்தியாயம் 13 வசனம் 28**

**கடவுளின் நினைவால் தான் உள்ளங்கள் நிம்மதியடைகின்றன.**

*கஷ்டத்துக்கு மேல கஷ்டம், வாழ்க்கையே வெறுப்பாக உள்ளது! எனக்கு மட்டும் ஏன் இப்படி? இப்படியெல்லாம் உங்களுக்கு தோன்றுகிறதா? அப்படியென்றால், இந்த QR code ஐ ஸ்கேன் செய்து கண்டிப்பாக இதை பாருங்கள்.*

◇◇◇◇◇◇◇◇◇

# இறைத்தூதர்கள்

இறைவன் மனிதனைப் படைத்து அப்படியே விட்டுவிடவில்லை. மனிதனுக்கு நேர்வழி காட்டும் பொறுப்பை இறைவனே ஏற்றுக்கொண்டான். மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் கற்றுத்தர, மனிதர்களில் சிறந்த நல்லொழுக்கமுடையவர்களை இறைத்தூதர்களாகத் தேர்ந்தெடுத்து, நல்வாழ்க்கை எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அவர்களின் மூலம் இறைவன் கற்றுத் தந்தான். மனிதர்களுக்கு நேர்வழியை சொல்லித் தரும் இறைவேதத்தையும் அவர்களுக்கு இறைவன் கொடுத்தான்.

முதல் மனிதரான ஆதாம் அவர்களே முதல் இறைத்தூதர். அவருக்குப் பின்னர், ஒவ்வொரு சமூகத்திற்கும் பல்வேறு காலகட்டங்களில் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டனர். அவர்களின் மூலம் இறைவழிகாட்டுதல் மனித சமூகத்திற்குக் கிடைத்தது.

இறைவனின் செய்திகளைத் தான், இறைத்தூதர்கள் மக்களுக்கு எடுத்துரைத்தனர் என்பதை பின்வரும் குர்ஆன் வசனங்கள் தெளிவாகச் சொல்கின்றன.

**குர்ஆன் அத்தியாயம் 7 வசனங்கள் 79, 93**

**என் மக்களே! நிச்சயமாக நான் இறைவனின் தூது செய்திகளைத்தான் உங்களுக்கு எடுத்துரைத்து உங்களுக்கு நல்லுபதேசமும் செய்தேன்.**

இந்தியா உட்பட உலகின் அனைத்து பகுதிகளுக்கும், வெவ்வேறு காலகட்டங்களில் இறைத்தூதர்களை இறைவன் அனுப்பியுள்ளான். தமிழ் சமூகம் பல ஆயிரம் ஆண்டுகளைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சமூகமாக இருப்பதால், தமிழ் சமூகத்திற்கும் இறைத்தூதர்கள் வந்திருக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை. ஆனால், தமிழ் சமூகத்திற்கு வந்த இறைத்தூதர்களின் பெயரோ, விபரமோ குர்ஆனில் சொல்லப்படவில்லை.

**குர்ஆன் அத்தியாயம் 10 வசனம் 47**

**இன்னும், (சென்று போன) ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தூதர் இருந்தார்.**

குர்ஆன் இருபத்தைந்து இறைத்தூதர்களின் பெயர்களை மட்டுமே குறிப்பிடுகிறது. அவர்களில் சிலர் நோவா, ஆபிரகாம், தாவூது, சாலமன், மோசே மற்றும் இயேசு கிறிஸ்து (அவர்களின் மீது இறைவனின் சாந்தி உண்டாகட்டும்). அந்த வரிசையில், இறுதியாக உலகிற்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர் தான் முஹம்மது நபி (அவரின் மீது இறைவனின் சாந்தி உண்டாகட்டும்) அவர்கள். உலகம் அழியும் வரை தோன்றவிருக்கும் முழு மனிதகுலத்திற்கும் இவர் தான் இறைத்தூதர். உலக மக்கள் அனைவருக்கும் நேர்வழிகாட்ட இறைத்தூதர் முஹம்மது நபிக்கு அருளப்பட்ட இறுதி இறைவேதம் தான் திருக்குர்ஆன்.

***குறிப்பு:*** தாவூது, சாலமன் போன்றவர்கள் மக்களை ஆட்சி செய்யும் மன்னர்களாகவும், அறநெறி கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்லும் இறைத்தூதர்களாகவும் இருந்தார்கள். நோவா, ஆபிரகாம் போன்றவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்காத இறைதூதர்களாக இருந்தனர்.

# இறைத்தூதர்கள் பற்றி திருக்குறள் பேசி இருக்கிறதா?

சங்க கால தமிழ்சமய மரபில் அந்த நிலத்தை ஆண்ட மன்னனும், நாட்டில் உள்ள தூதனும் அறநெறி கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்லும் பொறுப்பையும் ஏற்றிருந்தார்கள்.

சில சந்தர்ப்பங்களில், மன்னன் மக்களை ஆட்சி செய்யும் பொறுப்புடன், அறநெறி கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்லும் பொறுப்பையும் ஏற்றிருந்தான்.

வேறு சில சந்தர்ப்பங்களில், ஆட்சி பொறுப்பில் இல்லாமல், அறநெறி கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்லும் பொறுப்பை மட்டும் தூதன் ஏற்றிருந்தான்.

இதை மனதில் வைத்துக் கொண்டு, திருக்குறள் பேசும் மன்னன் மற்றும் தூதன் பற்றிய கருத்துக்களை நாம் அணுகும் போது, இறைத்தூதர்கள் பற்றி வள்ளுவர் பேசியிருக்க வாய்ப்புள்ளது என்று கருத முடிகிறது.

இங்கு உதாரணத்திற்கு, சில குறள்களை எடுத்துக்காட்டுகிறோம்.

**குறள் #695**

**எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை**
**விட்டக்கால் கேட்க மறை.**

ஆன்மீகத்தைப் பற்றியும், நற்பண்புகளைப் பற்றியும் அரசன் விளக்கும் போது, தொடர்ந்து கேள்விக் கேட்காமல், கவனம் சிதறாமல் கேட்க வேண்டும் என்று

வள்ளுவர் இந்தக் குறளில் சொல்லுகிறார்.

மன்னனின் கடமை ஆட்சி செய்வது மட்டுமல்ல; ஆன்மீகத்திற்கும் அறநெறிக்கும் அடிப்படையாக விளங்கும் மறைநூலை மக்களுக்கு எடுத்துரைக்கும் பொறுப்பும் அவனுக்கிருந்தது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

தூதன் என்பது யார்? ஒருவரின் செய்தியை மாற்றமின்றி, நேர்மையாக, பொறுப்புடன் மற்றொருவரிடம் எடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்படும் நபரையே நாம் தூதன் என்று புரிந்து வைத்துள்ளோம். வள்ளுவர் தூதனைப் பற்றி பேசும் போது, செய்தியை மட்டும் சொல்லும் வெறும் செய்தியாளனை பற்றித் தான் பேசுகிறாரா என்பதை சிந்திக்க வேண்டும்.

**தூதனைப் பற்றிச் சொல்லும் இந்தக் குறளை பாருங்கள்.**

குறள் #681

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்**
**பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.**

இங்கு தூதனுக்குத் தேவையான பண்புகளாக அன்பு, நற்குணம், நல்ல உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருத்தல் ஆகியவற்றை வள்ளுவர் குறிப்பிடுகிறார். தூதனுக்கு நற்குணம், அன்பு இருப்பது அவசியம். ஆனால் தூதன் நல்ல உயர்ந்த குடும்பத்தில் ஏன் பிறந்திருக்க வேண்டும்? கடிதத்தை கொண்டு வரும் தபால்காரர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும் என்று நாம் சொல்வதில்லையே! அதேபோல், செய்தியை மட்டும் எடுத்துச் செல்லும் தூதன் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இதிலிருந்து, தூதன் என்பவன் செய்தியை மட்டும் சொல்லும் வெறும் செய்தியாளன் இல்லை. அவன் ஆன்மீகத்தையும், அறநெறியையும் மக்களுக்கு சொல்பவனாக இருக்கிறான் என்பதைப் புரிந்துக் கொள்ளலாம்.

**வள்ளுவர் தூதனைப் பற்றிச் சொல்லும் போது, இப்படிச் சொல்கிறார்.**

**குறள் #688**

***தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்***
***வாய்மை வழியுரைப்பான் பண்பு.***

இந்தக் குறளில் தூய ஒழுக்கம், துணிவு, தக்க துணை உடையவனாக இருத்தல் என்ற மூன்றும் தூதுவனுக்கு இருக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்கிறார். ஒழுக்கத்தையும், துணிவையும் தூதுவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் என்று சொல்வதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் செய்தியை மட்டும் சொல்லும் தூதுவனுக்கு தக்க துணை இருக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது?

அதுமட்டுமல்ல, இந்த குறளில் தூதனை "வழியுரைப்பான்" என்று வள்ளுவர் சொல்கிறார். அதாவது, தூதன் "நேர் வழிகாட்டுபவன்" என்று சொல்கிறார். செய்தியை எடுத்துச் சொல்வது தானே தூதனின் பணி, அவனை ஏன் நேர் வழிகாட்டுபவன் என்று வள்ளுவர் சொல்ல வேண்டும்?

மேலே எடுத்துக் காட்டப்பட்ட இரண்டு குறள்களையும் ஆழமாக சிந்தித்துப் பார்த்தால், தூதன் என்பவன் செய்தியை மட்டும் சொல்லும் வெறும் செய்தியாளன் இல்லை. அவன் ஆன்மீகத்தையும்,

அறநெறியையும் மக்களுக்கு சொல்பவனாக இருக்கிறான் என்பதை உணரலாம்.

அதனால் தான், மக்களுக்கு நேர்வழி காட்டும் தூதனுக்கு தக்க துணையும், அவனது சொல், செயல், நின்று பேசும் துணிவு ஒரு மரபின் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்கிறார்.

இந்த கருத்திற்கு வலு சேர்ப்பது போல், கீழே நாம் எடுத்துக் காட்டும் குறள் உள்ளது.

குறள் #690

**இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது.**

தன் உயிருக்கே ஆபத்து வந்தாலும், அதற்காக பயந்து விடாமல், உறுதியுடன் செயல்படுபவனே இறைவனுக்கு நம்பிக்கையான தூதனாவான் என்று வள்ளுவர் சொல்கிறார். வேந்தன் என்றோ, அரசன் என்றோ சொல்லாமல், 'இறைவற்கு' என்று சொல்லியிருப்பது இறைவனைத் தான் குறிக்கிறது என்பதை உணரலாம்.

விரிவாக விளக்கினால் புத்தகம் பெரிதாகிவிடும் என்பதால், நம் கருத்துக்களை சுருக்கமாக கூறியுள்ளோம். தூது அதிகாரம் முழுவதையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால், ஆன்மிகத்தையும், நன்னெறிகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் தூதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைக் குணங்களை இந்த அதிகாரம் பேசுகிறது என்பதை புரிந்துக் கொள்ளலாம்.

◇◇◇◇◇◇◇◇◇◇

# முடிவில்லாத வாழ்க்கை வாழ...

குறள் #6

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

தீய ஆசைகளை அழித்து கடவுள் கற்றுத் தரும் ஒழுக்கத்தை பின்பற்றுபவர், நிலையாக வாழ்வார் என்று வள்ளுவர் சொல்லுகிறார். குர்ஆனும் இந்தக் கருத்தை மிக அழகாக சொல்கிறது.

குர்ஆன் அத்தியாயம் 79 வசனங்கள் 40,41

**யார் இறைவனுக்கு முன் (விசாரணைக்காக) நிற்கின்ற நாளைப் பயந்து, (தப்பான) மன இச்சையை விட்டு விலக்கிக் கொண்டாரோ, (நிலையான) சொர்க்கமே (அவரது) தங்குமிடம்.**

◇◇◇◇◇◇◇◇◇◇

# மரணத்திற்கு பின் வாழ்க்கை உண்டு

குறள் #247

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

இந்த குறளை கவனமாக படியுங்கள்.

பொருளில்லாதவர்க்கு அதாவது பணம் இல்லாதவருக்கு இந்த உலகம் இல்லை என்று வள்ளுவர் சொல்லுகிறார். சரி, அருள் இல்லாதவருக்கு **அவ்வுலகம்** இல்லை என்று வள்ளுவர் சொல்லுகிறாரே, **அது என்ன அவ்வுலகம்? இந்த உலகத்தை தவிர வேறு உலகம் இருக்கிறதா?**

வள்ளுவர் இது பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்.

குறள் #353

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து.**

இந்த குறளில், மெய்ப்பொருளை உணர்ந்தவர்களுக்கு இவ்வுலகை விட அடைய வேண்டிய மேலுலகம் அருகில் இருக்கும் என்று சொல்கிறார். மேலுலகம் என்பது என்ன? அது என்ன என்பதை, வேறு ஒரு குறளில் வள்ளுவர் தெளிவாகவே சொல்கிறார். இந்த குறளை பாருங்கள்.

குறள் #1042

**இன்மை எனவொரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.**

வறுமை ஒருவரிடம் வந்துவிட்டால், அவருக்கு இந்த உலகின் இன்பமும், மறுமையின் சுவர்க்க இன்பமும் இல்லாமல் போய்விடும் என்று சொல்லுகிறார்.

மற்றொரு குறள் இப்படி சொல்கிறது.

குறள் #98

**சிறுமையுவு நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.**

இந்த குறளில், பிறர்க்கு துன்பம் தராத இனிய சொல் ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும் என்று சொல்லுகிறார்.

மறுமை என்றால், மரணத்திற்கு பின் உள்ள நிலையான வாழ்க்கை என்று அர்த்தம்.

மரணத்திற்கு பின் ஒரு வாழ்க்கை உண்டு என்பதை வள்ளுவரும் சொல்கிறார் என்பதை இதிலிருந்து நாம் உணரலாம்.

மரணத்திற்கு பின் உள்ள வாழ்க்கை பற்றி குர்ஆன் சொல்லும் போது...

குர்ஆன் அத்தியாயம் 98 வசனங்கள் 7,8

**யார் நம்பிக்கைக் கொண்டு, நற்செயல்களை செய்தார்களோ, அவர்களுடைய கூலி இறைவனிடத்தில் உள்ள என்றும் நிலையான சொர்க்கங்களாகும். அதில் அவர்கள் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள்.**

யார் இறைவனை நம்பி, நற்செயல்களை செய்தார்களோ, அவர்களுக்கு நிரந்தர சொர்க்கம் உண்டு என்று குர்ஆன் சொல்கிறது.

***மரணத்திற்கு பின் வாழ்க்கை சாத்தியமா? அதை நம்புவது பகுத்தறிவா? போன்ற கேள்விகளுக்கு அறிவியற்பூர்வமான பதில்களை இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

***மறுபிறவி உண்மையா? புனர்ஜென்மம் உண்டா? இந்த கேள்விகளுக்கான பதில்களை தெரிந்து கொள்ள, இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

◇◇◇◇◇◇◇◇◇

# இந்த உலகம் தற்காலிகமே...

குறள் #336

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்று சொல்லும் அளவிற்கு இந்த உலகம் தற்காலிகமானது என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

குர்ஆன் அத்தியாயம் 40 வசனம் 39

**இந்த உலக வாழ்க்கை எல்லாம் தற்காலிக அற்ப இன்பம்தான். நிச்சயமாக மறுமைதான் நிரந்தரமான (இன்பம் தரும்) தங்குமிடம்.**

என்று இதே கருத்தை குர்ஆனும் மிக அழகாக சொல்கிறது.

# சமத்துவம்

குறள் #972

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.**

பிறப்பால் எல்லா மக்களும் சமம் தான் என்று வள்ளுவர் கூறுகிறார்.

மனிதர்கள் எல்லோரும் சமம் என்பதை குர்ஆன் மிக அழகாக சொல்கிறது.

குர்ஆன் அத்தியாயம் 49 வசனம் 13

**மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம். (அதனால், உங்களில் ஒருவர் மற்றவரைவிட உயர்ந்தவர் என்று பெருமை பேசாதீர்கள்.) உங்களில் எவர் பயபக்தி உடையவரோ, அவர்தான் இறைவனிடத்தில் நிச்சயமாக மிக உயர்ந்தவர்.**

மனிதர்கள் எல்லோரும் ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைக்கப்பட்ட ஓர் தாய் பிள்ளைகள் என்று குர்ஆன் சொல்கிறது. அதனால், பிறப்பால் உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பது கிடையாது. யார் நல்லவர்களாக வாழ்கிறார்களோ, அவர்களே உயர்ந்தவர்கள் என்பது தான் குர்ஆன் சொல்லும் கருத்து.

# ஒருவர் நமக்கு தீமை செய்தால்..

குறள் #314

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.**

நமக்குத் தீமை செய்தவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மையைச் செய்து விட வேண்டும் என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

குர்ஆன் அத்தியாயம் 41 வசனம் 34

**நன்மையும் தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே தீமையை தடுப்பீராக! யாருக்கு உம் மேல் பகை இருக்கிறதோ, அவர் உங்கள் நெருங்கிய நண்பர் போல் ஆகிவிடுவார்.**

தீமையை நல்லதை கொண்டே எதிர்கொள்ள வேண்டும் என்று இதே கருத்தை குர்ஆனும் வலியுறுத்துகிறது.

◇◇◇◇◇◇◇◇◇

# நீதமாக நடந்து கொள்!

குறள் #111

**தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.**

பகைவர், நண்பர், பக்கத்து வீட்டுக்காரர் என்று பார்த்து, ஒருதலைச் சார்பாக நிற்காமல், நீதமாய்

நடந்தால், இது மட்டுமே வாழ்க்கைக்கு போதும் என்று வள்ளுவர் சொல்கிறார். இதே கருத்தை குர்ஆனும் எப்படி அழகாக சொல்கிறது பாருங்கள்.

**குர்ஆன் அத்தியாயம் 4 வசனம் 135**

**உங்களுக்கோ, பெற்றோருக்கோ, உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் நீங்கள் நீதியை நிலைநாட்டுவோராகவும், இறைவனுக்காக சாட்சி கூறுவோராகவும் ஆகி விடுங்கள்! நீதி வழங்குவதில் மனோ இச்சையைப் பின்பற்றாதீர்கள்!**

◇◇◇◇◇◇◇◇◇

# தூய உள்ளம்

குறள் #34

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். இதுவே அறம். மனத்தூய்மை இல்லாத மற்றவை, வாழ்க்கை வேடங்களுக்கும் மற்றவர் அறியச் செய்யப்படும் ஆடம்பரங்களே என்று வள்ளுவர் கூறுகிறார்.

தூய உள்ளத்தோடு வாழ்வதன் சிறப்பை பற்றி குர்ஆன் இப்படி சொல்கிறது.

குர்ஆன் அத்தியாயம் 26 வசனம் 89

**யார் இறைவனிடத்தில் தூய உள்ளத்தோடு வருகிறாரோ அவர் (கண்ணியம் அடைவார்).**

◇◇◇◇◇◇◇◇◇

# உன் செயல்களை வைத்து தான்...

குறள் #505

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.**

ஒருவர் தாம் அடையும் பெருமைக்கும், மற்றொருவர் தாம் அடையும் சிறுமைக்கும், அவரவர்களின் செயல்களை வைத்தே முடிவு செய்யப்படும் என்று வள்ளுவர் இந்த குறளில் சொல்கிறார்.

குர்ஆன் அத்தியாயம் 45 வசனம் 22

**ஒவ்வொரு மனிதருக்கும் அவருடைய செயலுக்குத்தக்க கூலியே (இறைவனால்) கொடுக்கப்படும்.**

◇◇◇◇◇◇◇◇◇

# நல்ல சொற்கள் தர்மத்தை விட பெரிது

குறள் #92

**அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.**

முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, மனம் மகிழ்ந்து பொருளைக் கொடுப்பதைக் காட்டிலும் நல்லது என்று சொல்கிறார் வள்ளுவர்.

இதே கருத்தை குர்ஆன் எப்படி சொல்கிறது என்று பாருங்கள்.

**குர்ஆன் அத்தியாயம் 2 வசனம் 263**

**கனிவான இனிய சொற்களும், மன்னித்தலும்; தர்மம் செய்தபின் நோவினையைத் தொடரும்படிச் செய்யும் தர்மத்தை விட மேலானவையாகும்.**

◇◇◇◇◇◇◇◇◇

# கஞ்சத்தனம்

**குறள் #438**

**பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன் றன்று.**

யாருக்கும் எதுவும் கொடுக்காமல், செல்வத்தின் மீது ஆசை கொண்ட கஞ்ச மனத்தைப் பெற்றிருப்பது குற்றங்கள் எல்லாவற்றிலும் பெருங்குற்றமாகும் என்று சொல்கிறார் வள்ளுவர்.

**குர்ஆன் அத்தியாயம் 37 வசனம் 4**

**எவர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் பதுக்கிவிட்டு, அவற்றை இறைவனின் பாதையில் தர்மம் செய்யவில்லையோ, அவர்களுக்கு துன்புறுத்தக்கூடிய தண்டனை உண்டு.**

செல்வத்தை தர்மத்திற்காக செலவு செய்யாமல் பதுக்கி வைப்பது பெருங்குற்றம் என்று குர்ஆனும் சொல்கிறது.

◇◇◇◇◇◇◇◇◇

# தர்மத்திலும் நிதானம்

குறள் #477

**ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கு நெறி.**

குறள் #480

**உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**

தர்மம் செய்யும் போது, தம் பொருளாதார நிலையை அறிந்து கொடுக்க வேண்டும். அது தான் செல்வத்தைக் காப்பதற்கு சரியான வழியாகும் என்று சொல்லிவிட்டு, தன் பொருளாதார நிலையை புரிந்து கொள்ளாமல் அளவில்லாமல் கொடுத்துக் கொண்டே இருந்தால், அவர் செல்வத்தின் அளவு விரைவில் குறையும் என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

இதே கருத்தை குர்ஆனும் மிக அழகாக சொல்கிறது.

குர்ஆன் அத்தியாயம் 17 வசனம் 29

**(மனிதனே! தர்மம் செய்யாமல்) உனது கையை உன் கழுத்தில் கட்டப்பட்டதாக ஆக்காதே! (செலவு செய்வதில்) ஒரேயடியாக அதை**

**விரித்தும் விடாதே! (அவ்வாறு விரித்தால்) இழிவடைந்தவராக, (செல்வம் அனைத்தும்) தீர்ந்துபோனவராக தங்கிவிடுவாய்.**

◇◇◇◇◇◇◇◇◇

# புறம்பேசுதல்

குறள் # 183

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூற்றும் ஆக்கத் தரும்.**

பிறர் இல்லாத போது அவரைப் பற்றி தவறாக பேசி, அதாவது புறம்பேசி உயிர் வாழ்வதைவிட இறந்து போவது நல்லது என்று புறம்பேசுதலை மிகக் கடுமையாக வள்ளுவர் விமர்சிக்கிறார்.

குர்ஆன் அத்தியாயம் 49 வசனம் 12

**உங்களில் ஒருவர் மற்றவரைப் புறம் பேசாதீர்கள்! உங்களில் எவரேனும் இறந்த தனது சகோதரனின் மாமிசத்தைச் சாப்பிட விரும்புவாரா? அதை நீங்கள் வெறுப்பீர்களே!**

புறம்பேசுவது இறந்த தனது சகோதரனின் மாமிசத்தை உண்பதற்கு சமம் என்று குர்ஆனும் புறம்பேசுதலை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

◇◇◇◇◇◇◇◇◇

# மது அருந்தாதே!

குறள் #924

**நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

போதைப் பொருளைப் பயன்படுத்தினால், வெட்கம் என்ற நற்பண்பு இல்லாமல் போய் விடும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

மது பற்றி குர்ஆன் சொல்லும் போது:

குர்ஆன் அத்தியாயம் 2 வசனம் 219

**"மது மற்றும் சூதாட்டம் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அவற்றில் பெரும் பாவம் உள்ளது..." என்று கூறுவீராக.**

குர்ஆன் அத்தியாயம் 5 வசனம் 90

**மதுபானமும், சூதாட்டமும் சாத்தானின் அருவருப்பான செயல்கள்; எனவே இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்!**

தான் என்ன செய்கிறோம் என்பதையே மறக்கடித்து விடும் மது என்ற இந்த தீய பழக்கத்தால் பல குடும்பங்கள் சிதைகின்றன. சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. குறிப்பாக, பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் போதையில் இருந்தனர் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தீய போதை பழக்கத்தை, திருக்குறளும், குர்ஆனும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

***ஹெரோயின், கோகைன் போன்ற போதை பொருட்களை விட, மது நமக்கு அதிக தீங்கு விளைவிக்கிறது. நம் மூளையை மது மிக மோசமாக பாதிக்கிறது. மது அருந்துவதால் 200க்கும் மேற்பட்ட நோய்கள் ஏற்படுகின்றன என்று உலக சுகாதார அமைப்பு (WHO) கூறுகிறது. கூடுதல் விபரங்களுக்கு இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

◇◇◇◇◇◇◇◇◇◇

# மரண வேதனை

குறள் #335

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**

“நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டு விக்கல் வருவதற்கு முன்” என்று மரணிக்கும் நேரத்தின் கடுமையை வள்ளுவர் விவரிக்கிறார்.

குர்ஆன் அத்தியாயம் 50 வசனம் 19

**மரணத்தின் வேதனையும், மயக்கமும் உண்மையாக வந்துவிடும் போது, (அவனை நோக்கி) “நீ தப்பிவிட நினைத்தது இதுதான்” (என்று கூறப்படும்.)**

மரண வேதனை என்பது உண்மை என்று குர்ஆனும் வலியுறுத்துகிறது.

மேலே நாம் எடுத்துக்காட்டிய குறளில், மரணம் வருவதற்கு முன் நல்ல செயல்களை விரைவாகச் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் சொல்கிறார். இதே கருத்தை, குர்ஆன் சொல்வதை நீங்களே பாருங்கள்.

**குர்ஆன் அத்தியாயம் 63 வசனம் 10**

**உங்களுக்கு மரணம் வருவதற்கு முன் நாம் உங்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (நல்வழியில்) செலவிடுங்கள்! "இறைவா! குறைந்த காலம் வரை எனக்கு நீ அவகாசம் அளித்தால், தர்மம் செய்து நல்லவனாக ஆகிவிடுவேன்" என்று அப்போது (மனிதன்) கூறுவான்.**

◇◇◇◇◇◇◇◇◇

# ஏழைக்கு உணவு கொடு!

**குறள் #226**

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

பசியில் வாடும் ஏழைகளின் பசியை போக்குவது, ஒருவன் சேர்த்து வைத்துள்ள செல்வத்தின் உண்மையான பயன் என்கிறார் வள்ளுவர்.

ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்று குர்ஆன் பல இடங்களில் சொல்கிறது. அதில் இரண்டு வசனங்களை மட்டும் இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.

**குர்ஆன் அத்தியாயம் 76 வசனம் 8**

**கடவுளின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும்,**

**கைதிகளுக்கும் (பயபக்தி உள்ளவர்கள்) உணவளிப்பார்கள்.**

ஏழைக்கு உணவளிக்காதவனைப் பற்றி:

**குர்ஆன் அத்தியாயம் 107 வசனம் 3**

**“ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டாதவனை நீர் கண்டீரா?”**

என்று கடுமையாக குர்ஆன் விமர்சனம் செய்கிறது.

***குறிப்பு : திருக்குறள் அசைவ உணவு உண்ணக்கூடாது என்று சொல்கிறது. ஆனால், குர்ஆன் அசைவ உணவு உண்ண அனுமதிப்பது ஏன் என்று கேள்விக்கு விடை காண, இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

◇◇◇◇◇◇◇◇◇

# சொல்வதை செய்

குறள் #664

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

நான் இப்படிச் செய்யப் போகிறேன் என்று சொல்லுவது சுலபம். ஆனால், சொல்லியபடியே அதைச் செய்வதுதான் கடினம் என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

**குர்ஆன் அத்தியாயம் 61 வசனங்கள் 1,2**

**நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்? நீங்கள் செய்யாததைச் சொல்வது இறைவனிடம் கடும் கோபத்திற்குரியதாக இருக்கிறது.**

சொல்வதை செய்யாதவர்கள் பற்றி குர்ஆன் கடுமையாக விமர்சிக்கிறது.

◇◇◇◇◇◇◇◇◇

## சிந்தித்து செயல்படு

**குறள் #423**

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

எந்தக் கருத்தை எவர் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல், உண்மை எது என்பதை ஆராய்வது தான் அறிவு என்று வள்ளுவர் சொல்கிறார்.

குர்ஆன் என்ன சொல்கிறது தெரியுமா?

**குர்ஆன் அத்தியாயம் 47 வசனம் 24**

**அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அவர்களின் உள்ளங்கள் மீது பூட்டுக்கள் உள்ளனவா?**

சொல்வதை எல்லாம் கண்ணை மூடிக்கொண்டுக் கேள் என்று குர்ஆன் சொல்லவில்லை. மாறாக, குர்ஆன் சொல்வதை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்

என்று கட்டளையிடுகிறது.

“**நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?**” என்று கேட்கும் வசனங்கள் குர்ஆனில் ஏராளம். (பார்க்க: குர்ஆன் 2:44, 2:76, 3:65, 6:32, 7:169, 10:16, 11:51, 12:109, 21:10, இன்னும் பல வசனங்கள்).

இப்படி திருக்குறளுக்கும், திருக்குர்ஆனிற்கும் உள்ள ஒற்றுமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த புத்தகத்தில் சிலவற்றை மட்டுமே பார்த்தோம். இது போல், வேறு பல எண்ணற்ற ஒற்றுமைகள் உள்ளன.

◇◇◇◇◇◇◇◇◇

# ஒரு வேண்டுகோள்

இந்த கட்டுரையை படிக்கும் நண்பர்களுக்கு நாங்கள் வைக்கும் வேண்டுகோள் என்னவென்றால், குர்ஆன் என்ன தான் சொல்கிறது என்று தெரிந்து கொள்ள ஒரு முறையாவது குர்ஆனை படியுங்கள். நன்றி !

***திருக்குர்ஆன் மொழியாக்கத்தை பதிவிறக்கம் செய்ய, இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

***இஸ்லாம் ஒரு அரபு மதம் என்று சிலர் எண்ணுகின்றனர். இஸ்லாம் ஒரு அரபு மதமா என்பதை அறிந்துக் கொள்ள, இந்த QR code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.***

# முடிவுரை

இந்த நூலில் நாம் எடுத்துக் காட்டிய திருக்குறள் மற்றும் திருக்குர்ஆனின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடந்தால், அமைதியும் ஆரோக்கியமும் நிறைந்த சமூகச் சூழலை நம்மால் உருவாக்க முடியும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

*படிப்போம்!*

*பின்பற்றுவோம்!*

*உயர்வடைவோம்!*

உங்கள் கருத்துகளைப் பகிர விரும்பினால்,

**ask@curioushats.com**

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

*நன்றி!*